வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

உ
சிவமயம்

# இந்து சாதனம்

# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ

அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம்: நள ஞு புரட்டாதி மீ உக - உ வெள்ளிக்கிழமை (15 - 10 - 1976) [இல: உஅ

## திருக்கேதீச்சரத் திருப்பணிச் சேவையில்

# சைவபரிபாலனசபையின் பணி

### ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அங்கத்தவர்களின் பேராதரவு

**சைவபரிபாலன சபையின் 87-ஆவது ஆண்டுக் கூட்டத் தொடர்ச்சி நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் நிகழ்ந்தது.**

புதிய ஆண்டு உத்தியோகத்தர்கள் தெரிவு பெரும்பாலும் எதிர்ப்பின்றி முடிந்தது.

தலைவர்: திரு. ச. செல்வராசா — சட்டத் தரணி.
உப தலைவர்கள்: திரு. நம. சிவப்பிரகாசம் ,,
,, திரு. செ. இராசேந்திரம் ,,
செயலாளர்: சைவப்புலவர். க. சிற்றம்பலம்
உபசெயலாளர்கள்: திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராசா - சட்டத்தரணி
: திரு. மயில். அமிர்தலிங்கம்
பொருளாளர்: திரு. வை. சி. செந்தில்நாதன் சட்டத்தரணி
பரீட்சைச் செயலாளர்: திரு. சி. சிவரத்தினம் ஆசிரியர்
சமயத் துறை: திரு. மு. மயில்வாகனம்

இக் கூட்டத்திலே, திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைச் செயலாளர் திரு. இ. நமசிவாயம் சமர்ப்பித்த விண்ணப்பம் வாசிக்கப்பெற்றது. அங்கத்தவர்கள் பலர் இதற்கு ஆதரவாகப் பேசினர்.

பசு வதையை ஒழிக்க அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்பது உட்பட தீர்மானங்கள் பல ஆராயப்பெற்றன.

இக் கூட்டத்திற் தெரிவு செய்யப்பெற்ற 'அ' பிரிவின் புதிய நிர்வாக சபை.

1. திரு. வை இரகுநாத முதலியார்
2. திரு க சிற்றம்பலம்
3. திரு மு மயில்வாகனம்
4. திரு. க சிவராமலிங்கம்
5. திரு. வே. யோகநாதன் (வைத்திய கலாநிதி)
6. திரு ச. செல்வராசா,
7. திரு. இ. செ. மன்மதராயன்
8. திரு. நா. த. சிவஞானம்

'ஆ' பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்கள்:

1. திரு. த. சோமசுந்தரம்
2. திரு. ஏ கந்தசாமி
3. திரு. இ. பொ. இராசையா
4. திரு. நம சிவப்பிரகாசம்
5. திரு. ச. இராசேந்திரம்
6. திரு. இ தங்கராசா
7. திரு. சி. சிவரத்தினம்
8. திரு. சி செ. சோமசுந்தரம்

'இ' பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்கள்,

1. திரு. சிவ. உ. சோமசேகரம்
2. திரு. த. சண்முகலிங்கம்
3. திரு. க. சிற்றம்பலம்
4. திரு. ச. அம்மையப்பர்
5. திரு. வ. கார்த்திகேசு
6. திரு. நா. செல்லப்பா
7. திரு. ம. அமிர்தலிங்கம்
8. திரு. பே. சோமசுந்தரம்

### "தமிழகத்திற் கண்ட காட்சியை இங்கு காண விழைகின்றேம்"

### திருப்புகழ் மாமன்ற விழாவில் குருமகா சந்நிதானம் அருளுரை

"தமிழகத்தில், ஆங்காங்கே அருணகிரியாருக்கும் திருப்புகழுக்கும் விழா எடுக்கும் சமயம், இங்கு காண முடியாத காட்சியையும் காண முடிகிறது. பெண்மணிகள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, கோஷ்டியாகத் திருப்புகழ், கந்தரநுபூதியாகிய திருப்பாடல்களைப் பக்தியுடனும், இசையுடனும் பாடி வருவது தான் அந்தச் சிறப்புக்காட்சி. ஆனல், எமது நாட்டிலே மிக மிக அரிது அக்காட்சி என்பதை எண்ணும்போது சைவத் தமிழ் மக்களாகிய நாம் மிகவும் வேதனைப்பட வேண்டியுள்ளது.

இங்கு அருணகிரியாருக்கு விழா எடுக்கும் இந்தக் காட்சி எமது மனதை வருத்தப்படத் தக்கதாகச் செய்துள்ளது. மக்கள், அதாவது சைவ அன்பர்கள், பக்தர்கள் திரளாகக் கலந்து கொள்ளாததுதான் மிகவும் வருந்தத் தக்கதாகும், இந்நிலை மாறிப் பெருந் திரளான பக்தர்கள் திருப்புகழ் விழாவில் கலந்து பயன்பெற வேண்டும் என்பது எமது பேரவா" இதை சைவப் பெருமக்கள் நன்கு சிந்தித்தல் வேண்டும்,

நல்லை. ஞானசம்பந்தராதீன கலா மண்டபத்தில், திருப்புகழ் மாமன்றத்தினரால் நடாத்தப் பெற்ற திருப்புகழ் விழாவின் போது, அருளாசி வழங்கிய, குருமகா சந்நிதானம். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள்,

திருமுறை - திருப்புகழ் ஓதல்: செல்வி விக்கினேசுவரி - ஆறுமுகமும், மழலையுரை - சிறுமி கேதீசுவரி - ஆறுமுகமும் நிகழ்த்தினர். விழா திரு. ஆ. துரைராசசிங்கம் (மன்ற உபதலைவர்) தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில், செல்வி. பவானி - பாலசுப்பிரமணியத்தின் திருப்புகழ் இசை, சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது

பொருளாளர்: எஸ். கனகரத்தினம் நன்றியுரை கூறும்போது மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தன்று திருப்புகழ் விழா நடைபெற்று வருவதால் அன்பர்கள் திரளாகக் கலந்து கொள்ளும்படி வேண்டினர்.

— தாவை. சம்பந்தன்.

### ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில்

கொழும்பு செக்கடித்தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில இந்தியாவிலிருந்து வருகை தரவிருக்கும் "சத்தானந்த செல்வமணி", ஸ்ரீ சாயி மாதா சிவ பிருந்தா தேவி அம்மையார் இம்மாதம் 23-ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை கந்தசஷ்டி விசேஷமகோற்சவத்தில் சமயச் சொற்பொழிவாற்றுவார். இதன்பின் அம்மையார் மலைநாடு. கிழக்கு மாகாணம், வடபகுதி ஆகிய இடங்களிலும் சொற்பொழிவாற்றுவரா.

இதற்கான ஒழுங்குகளை நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

அனைத்துலக

### மதுவிலக்கு வாரம்- மக்கள் வாரமாகுக!

சர்வதேச மதுவிலக்கு இயக்கத்தினர் 16-10-76 தொடக்கம் 23- 0-76 வரைக்குமுள்ள வாரத்தை மதுவிலக்கு வாரமாகக் கணித்துப் பிரசாரவழியில் மக்களை மதுவினின்றும் பாதுகாக்க ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

தீபாவளித் தினம் ஆகும் 20-10-76 இந்தவாரத்திலேயே நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

அகில உலகமுமே மதுவின் கொடுமையை உணர்ந்து பரிகாரம்தேட முயன்று வருகின்ற இவ் வேளையில் இயல்பாகச் சமய வழியில் நிற்கும் ஆகிய நாடுகள் மதுவை முற்றாக ஒழிப்பதல்லவா சிறந்த பணி.

மதுவிலக்கு வாரத்தில் மக்களுக்கு இம்மாபாதகத்தின் தீங்கை எடுத்துச் சொற்பெருக்காலும், கட்டுரைகளாலும், நாடகங்களாலும் விளக்க அறிஞர்களும், அவைகளும் முன்வர வேண்டும். இது ஒரு பெருந் தொண்டாகும்.

நல்லைக் குருமணிகளின்

### கந்தசஷ்டி கால விரிவுரைகள்

கந்தசஷ்டி விழாத் தொடர்பில், நல்லை, ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் தினமும் பிற்பகல் 3-00 மணி முதல் 4-00 மணி வரை ஆதீனத்திலும்,

பிற்பகல் 4-15 மணி முதல் 5-15 மணிவரை நல்லைக் கந்தன் ஆலயத்திலும் இரவு. 7.30 மணி முதல் 8-30 மணிவரை மாவைக் கந்தன் ஆலயத்திலும் இன்னிசை விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். (தா — ச.)

### தீபாவலித் திருநாளிலே

தெய்வ சிந்தனை புரிவோம்

வருகிற வெள்ளிக்கிழமை தீபாவலித் திருநாள். இப்பெருநாளின் முக்கியம் என்ன? எவ்வாறு இந் நாள் அநுட்டிக்கப்பட வேண்டியது? என்றெல்லாம் யாராவது எண்ணுகின்றார்களா?

நீராடிக் களியாட்டம் செய்ய வசதியான வேளையென்று பாமரமக்கள் மத்தியில் நிலவுகின்ற பிழையான கருத்து சமய வளர்ச்சியால் இன்னமும் அகற்றப்படவில்லை.

நோன்பு வேளையாக அநுட்டிக்கப்பட வேண்டிய புண்ணிய காலத்தைக் கொலைக்கும், குடி வகைக்கும் பயன்படுத்தும் பாதகர்கள் தொகை குறைந்தபாடில்லை!

தீமையை அழித்துச் செம்மையை நிலை நாட்டிய திருநாளாகையாற் கோடித் துணி அணியும் வழக்கம் உண்டு, அவ்வாறு புதிய ஆடைகளைப் புனைந்துகொண்டு மதுவுக்கும் மாமிசத்துக்கும் இடங்கொடுப்பவர்களை என்னென்று அழைப்பது? அசுரனை அழித்த நாள் என்பது வரலாற்றுண்மை. அவ்வுண்மையின் சின்னமாக அசுரத்தனத்தைக் குறிக்கும் கொலை குடிபோதை இவற்றை விலக்குவதன்றோ முறை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ புரட்டாதி மீ உகூ உ வெள்ளி

## முன்னோர் முயற்சி பின்னோர் பெருங் கடன்

சென்ற காலத்தின் சிறப்பு ஆன்றோர் ஆற்றிய அருந்தொண்டேயாகும். மொழி வளர்த்துச் சமயம் பயின்று வழி வழி ஒழுக்கநெறி உணர்த்திப் பணிகள் பலப்பல செய்த சீலர்கள் எம் முன்னோர்கள். அத்தகைய உத்தம பரோபகாரம் தந்த பேறுகளில் ஒன்றே எண்பத்தேழாண்டுகள் பண்புடன் நிலவி வரும் சைவ பரிபாலன சபை. பூர்வீகப் புண்ணியப் பொருத்த முடைத்தாதலின் இச் சபை காலப் போக்கிற் கப்பால் வேரூன்றி விட்டதெனலாம்.

எனவே முன்னோரின் முயற்சி திருவினையாக்கிய நிகழ்ச்சியேயென்று பின்னோர் ஆகிய நாமும் இன்னும் பின் வருபவர்களும் உன்னி நன்றி அறிவுடன் இப்பணி எப்பொழுதும் தொடர்ந்து துலங்க உழைக்க வேண்டிய கடமை யுடையேமல்லவா?

சமய வாழ்வே அனைத்துக்கும் அடிப்படையாகவுள்ள ஆதரவென்று உலகவியலில் அமிழ்ந்திருக்கின்றவர்களும் உணர்ந்துவிட்டனர். உய்யும் வழி தெய்வ வழிபாட்டு நெறி என்ற உண்மை பூரணமாகப் புலனாகும் வரைக்கும் ஈடேற்றம் அரை குறையாகவே வரும். இந்த விழிப்புணர்ச்சியை மேலும் விளங்க வைக்க வேண்டிய பெருங் கடமை எங்கள் பாலுள்ளது.

சபை சற்கருமங்களாற்ற அயரா துழைத்து யாவரும் முயலுவோமேயானால் நாவலர் நற்றவையாரின் நன் முயற்சியும் அவர்தம் அடி அடி வந்த அறிஞர்களின் தொடர்ச்சியான செயல்களும் பெரும் பயன் விளைவிக்கும் என்பதற்கியாதுமோர் சந்தேகமும் எழாது.

எங்கள் சபையின் இலட்சிய அங்கம் இந்துசாதனம். என்றும் இளையாய் என்று விதந்து பாராட்டப்பெறும் இந்த வெளியீடு உருவத்திற் குறுமுனி போலிருந்து கருமத்திற பெரும் பயன் நல்குவதொன்றாகும்.

சமய இதழ் என்றால் அதற்காதரவு பெறுவது சுலபமல்ல என்பதை நாமறிவோம்; ஆனால் சமயிகளாக வாழ்கின்றவர்கள் இந்த இதழை இன்றியமையாததொன்றென்று வளர வைப்பவர்களாகத் தொண்டாற்ற வேண்டியவர்கள்.

காலத்தாற் பழையது, கருமத்தாற் பலனுடையது; சீலத்திற் சிறப்புறுவது; செந்தமிழ் ஆர்வத்தாற் செம்மை திகழ்வது இந்துசாதனம். இது எங்கள் சபையாரின் மா தனம். சபை வாழ, சாதனம் வளரச் சைவ மக்களே சாலப்பணி புரியுங்கள் என்று நாம் வேண்டினால் அது ஓர் சால்பு விண்ணப்பம் என்பதே கருத்தெனக.

உ

## பெரியபுராண பூர்த்திப்படிப்பு

### வெள்ளானைச் சருக்கம்

திருவருளை முன்னிட்டு 2—4—76ல் சைவபரிபாலன சபை ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட பெரிய புராண படனம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேற்படி படனத்தின் பூர்த்திப் படிப்பு (வெள்ளானைச் சருக்கம்) ஐப்பசி மீ 4ந் உ புதன்கிழமை (20-10-76) மாலை 6-00 மணியளவில் நிகழும்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 11-10-76.

மு. மயில்வாகனம்.
சமயப்பிரசார அமைச்சர்

## புலவரின் அறுபதாண்டுப் பூர்த்தி

(திரு. பொன். பத்மநாதன், யாழ்ப்பாணம்)
(சி. க. பாததூளி)

அறுபதாம் ஆண்டு என்னும் அரிய இடைக்காலத்தைத் தாண்டி இன்னும் பல்லாண்டு வாழப் பரம்பொருளின் கருணைக்குரிய பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள்

ஸ்ரீ விநாயகர் வெண்பா அந்தாதி
கோயில் அல்லது சிதம்பரச் சிறப்பு
தில்லையந்தாதி
பராசத்தி மாலை

என்னும் சிறந்த சைவ சமய நூல்களின் நூலாசிரியராவார். இவர்களது அறுபதாண்டுப் பூர்த்தி 8-10-76 அன்று நன்கு நிகழ்ந்தது. அன்னார் இயற்றிய வேறு நூல்கள் பலவுள: அவற்றுள்:

1. திருவருட்பயன் வசனம் 2, மூவர் தமிழ் விருந்து, 3. நால்வர் இசைக் கதை விருந்த, 4. சைவத்திருமுறைகளில் ஐந்தெழுத்தின் பெருமை 5. கந்தரனுபூதி உரை 6. திருக்கேதீசுரநாதர் திருவிரட்டை மணிமாலை 7. கதிர்காமக் கந்தன திருவிரட்டை மணிமாலை 8, வாழி கதிர்காமம் 9. தெல்லிப்பளை துர்க்காதேவி திருக்காப்பு மாலை. நவமணி மாலை 10. திருவூஞ்சல்கள் (அனேகம்) 11. விவாக சிந்தாமணி (-5) (இவை சி. தொண்டன் மூலம் வெளி வந்தவை,)

இவரால் ஆக்கப்பட்டனவாகும். அன்னாரது (60) அறுபதாண்டுப்பூர்த்தியின் போது இவரியற்றிய சைவ சமய அறிவு வளர்ச்சிக்கான பல நூல்களையும் சைவ சமயிகள் நினைவு கூரக்கடமைப்பட்டவர்கள்.

பண்டிதர் சைவ பரிபாலன சபையால் நடாத்தப்பட்ட சைவ மகாநாடுகள் பலவற்றிலும் பங்குபற்றி உரையாற்றியும் தலைமை வகித்தும் சிறப்பித்துள்ளனர். வேறு பல சைவசமயக் கவியரங்குகள் பலவற்றிலும் பங்குபற்றி அரங்கேறியும் நன்மதிப்புப்பெற்றிருக்கின்றார். இந்துசாதனம் பத்திரிகை மூலமும் பல கவிகள் வெளிவந்தன.

இலங்கை வானொலியில் சைவ நற்சிந்த சைவ சமய இலக்கியப் பேச்சுக்களையும் ஆற்றியுள்ளார் இவரின் பெருமைக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பரம்பரையில்வந்த நம் குருமணியும் அவர்கள் குருமணியுமான சிலத்திரு. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்களால் பாராட்டப் பெற்றிருத்தல் ஒன்றே போதும் இவரின் ஆற்றலை அளவிட.

பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களாலும் திருவாசகத்துக்கு ஆராய்ச்சியுரை விரிவுரையெழுதிய அமரர் காரை. உயர்திரு பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்களாலும் தென்னிந்தியப் புலவர் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை கவிமணி நிலையம் அறக் காவலர், வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பெரியார்களை நாம் பாராட்டி அவர்கள் தொண்டு மென்மேலும் வளர்ந்து வர எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுதல் செய்வோமாக.

## "திருமுறை நாதம் ஒரு தரம் கேட்டால்...."



பத்தர்: "ஞாலம் நின் புகழே ஆக வேண்டும் ... ..." என்ற அருள் பெருகும் உணர்வுதான் நல்லைத் திருப்பதியில் கால்அடி வைத்ததும் உண்டாகிறது ஆதீனப் பக்கம் நோக்கினால் ஒரே இசை மயம்; இடர்களை பதிகம் முதலாம் அருட் பாசுரங்களை, பரமாசாரிய சுவாமிகளும் தொண்டர்களும் தினமும் ஓதுகிறார்கள். மாலைப் பொழுது என்றதும் மனம் நல்லூருக்கு இழுக்குதப்பா?

சித்தர்: 'திருமுறைப் பயிற்சி அருகுது என்றும், 'தப்பிசை' எங்கும் நுழையப் பார்க்கிறது என்றும் குரல் கொடுப்போர் நற்பணிகளுக்கு உதவ முன் வந்தால் எவ்வளவுபயன், எங்கும் பரவும்; நம்மவர்களிற் பலர் செல்வத்தை செல்வன் பணிக்குச் செலவு செய்கின்றனரா? எத்தனை வழகளில் இறைக்கிறார்கள்? இந்த ஆதீனத்திற்கென ஒரு சமயப் பிரசாரவாகனமும் — ஒலிபெருக்கிக்கருவியும் இருந்தால்இன்னமும் எவ்வளவு தொண்டுகள் எங்கும் பரவும என்கிறார்கள் சைவ அன்பர்கள். நல்லதை நம்மவர்கள் சிந்திப்பார்களா? பெரிய தேவஸ்தானங்கள் சில சேர்ந்தோ - சைவத்தாபனங்கள் — அன்பர்கள் சேர்ந்தோ செய்தல் தருமமன்றோ?

"நாயன்மார்-நாதன்"

## பருத்தி விதைகள் இலவசம்

பருத்திச் செய்கையில் பொதுமக்களை ஈடுபடுத்துவதற்காக மில்க்வைற் தாபனத்தார் பருத்தி விதைகளைப் பொது மக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்கிறார்கள். தேவையானோர் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மகாசனக்கல்லூரி

## மகத்தான நவராத்திரி விழா

இவ்வாண்டு எமது கல்லூரியில் நடைபெற்ற நவராத்திரிக் கலைவிழா: எமது கல்லூரிச் சைவ வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சிறப்பாக நடைபெற்றது. தினமும் ஒவ்வோர் வகுப்புப் பூசையும் பக்தியுணர்வு உண்டாகும்வண்ணம் நடைபெற்றது கடைசித்தினங்களாகிய வாணி விழா மிகவும்சிறப்பாக நடைபெற்றது,

முதல் நாள் வாணிவிழா வியாழக்கிழமை (1976-09-30) இரவு துரையப்பாபிள்ளை அரங்கிலே நடைபெற்றது கல்லூரி அதிபர் திரு, பொ. கனகசபாபதி அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள் அன்றையதினம் மாலை 6-30 மணியயளவில் கல்லூரி சிவகாமிசமேத ஆனந்த நடராசருக்கு ஆராதனை நடைபெற்றதன் பின்பே விழா ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரி மாணவர்களின் கலை நிகள்சகள் நடைபெற்றன.

இரண்டாம் நாள் வாணி விழா (1976-10-10) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் துரையப்ப-பிள்ளை அரங்கிலே நடைபெற்றது. கல்லூரி மாணவர்களும் ... கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். அன்று எமது கல்லூரி மாணவ கவிஞர்களின் கவியரங்கம் நடைபெறற பொழுது; எமது கல்லூரி ஆசிரியர் திரு. நா. ஆறுமுகம அவர்களும திரு நா, சுப்பிரமணிய ஐயர் அவர்களும் கலந்து கொண்டனர். இவ்வரங்கிறகு எமது கல்லூரி ஆசிரியர கவிஞர் திரு செ. கதிரேசர்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அன்றையதினம் "மனித வாழ்விற்கு உணர்வா? அறிவா? அவசியம் என்ற தலைப்பிற் பல அறிஞர்கள் கூடிய பட்டிமன்றம ஒன்று நடைபெற்றது அப்பட்டிமன்றத்தில உணர்வு அவசியம் என்றதலைப்பில் திரு நா சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சைவப் புலவர் திரு செல்லததுரை அவர்களும் சிறந்த சொற்பொழிவு ஆற்றினர்கள் இவர்களுககு எதிர்வாதிகளாக அறிவு தான் அவசியம் என்ற தலைப்பில திரு. சுப்பையா அவர்களும் திரு, நவரட்ணம் அவர்களும வாதிட்டனர். பட்டிமன்றததிற்கு எமது கல்லூரி உப அதிபர் திரு.ச. ஆறுமுகராசா அவர்கள தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். அன்றைப் தினம் இறுதி நிகழ்ச்சியாக இளவாலை பாலமுருகன் வில்லிசைக் குழுவினர் அன்னையே அருள் தருவாய்" என்ற கவிப்...

பின்கீழ் அபிராமிப்பட்டரின் சரித்திரததை வில்லிசை மூலம் மாணவர்களுக்கு எடுத்தியம்பினர்.

இறுதிநாள் நிகழ்ச்சி சனிக்கிழமை 1976-10-02 எமது கல்லூரி அரங்கிலே நடைபெற்றது. அன்று இராதாகிருஷ்ணன் சந்தான கிருஷ்ணன சகோதரர்களின் சோமழாக்கச்சேரி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து யாழவளாக விரிவுரையாளரான திரு. விநாயகமூர்த்தி அவர்கள் "யாதுமாகி நின்றாய்" என்ற பொருள்பற்றி சிறப்புச்சொற்பொழிவாற்றினார். கலைநிகழ்ச்சிகள் முடிவுற்றதும் ஆலயததில் பூசையும கன்னிவாழை வெட்டும் மிகச்சிறப்பாக நடைபெற்றன, அன்றைபதினம் புதிதாக உருவாக்கப்பெற்ற சைவவளர்ச்சிக கழகப் படிப்பகம் அதிபர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்வாண்டு எமது கல்லூரிச் சைவவளர்ச்சிக் கழகத்தின அரும முயற்சியாலேயே நவராததிரிவிழா பத்துத்தினங்களும வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவற்றிறலே மூலகாரணமாய் அரும்பாடுபட்டு உழைத்தவா, எமது கழகப் பொறுப்பாசிரியா திரு ச. விநாயகரத்தினம் அவர்களேயாவர் இவரது அருமபெரும் முயற்சியால எமது கலலூரி ஆலயம் புனராவர்த்தனம் நடைபெற்றதோடு நவராத்திரி விழாவும எனறும நடைபெறுதவகையில் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறவியின் பயன்

சைவனுக்கு அழகு திருவாசகம் படித்தல், திருவாசகம் படித்தவன் இந்தப் பிறவி எடுத்ததைக் குறித்துக் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தப் பிறவி எடுத்ததின் பயனை அவன் பெற்றுவிட்டான்; அரியதாகிய மானுடப்பிறவி எனக்குக் கிடைத்ததே எழுபது வருஷம் இந்த உடம்போடு வாழ்ந்தேனே; இந்தப் பிறவியிலே, இந்த வயதிலே உயிருக்கு உறுதியாகிய நான்தேடிய தேட்டம் யாது'' என்றொருவன் தன்னை வினவு போது "ஆகா! நான் திருவாசகம் படித்தேனல்லவா" அது இதைப்போன்ற பத்துப்பிறவிகளுக்குப் போதுமேயென்று நினைந்து அவன் பூரண திருப்தி அடையலாம்.

— சைவப்பெரியார்
சு. சிவபாதசுந்தரனார்

## ஏநாதிநாத நாயனார் மேடையேற்றம்

### மத்திய கல்லூரியில் வாணி விழா

திருநீற்ற மிகவும் போற்றிச் சிவவேடத்தை நன்கு மதித்த ஏநாதிநாத நாயனார் சரித்திரம் ஒருசிறு நாடகமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இந்துமா மன்றத்தால் வாணி விழாவில் (30-9-76) மேடையேற்றப்பட்டது ஆறும்வகுப்பு மாணவர்களே இதில நடித்தனர்.

கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகநன்றாக பாதுகாபட்டாபிஷேகம் என்னும் சிறு நாடகத்தில் நடித்தனர். பூசை நடைபெற்றதும் அதிபரின் தொடக்கவுரைக்குப் பின் தலைமையுரை நிகழ்த்திய மன்ற இயக்குநர் திரு. ஷண்முக. குமரேசன் 'கிறீற்தீவில் அகழ்வாராய்ச்சியின்போது சங்கவூர் தீயில் அம்மை வீற்றிருக்கும் நாணயம் ஒன்று கண்டெடுக்கப் பட்டது. இது தொன்மை வாய்ந்த அம்பிகை வழிபாட்டைக் காட்டுகிறது'' எனக்கூறினார்.

மன்றத்தலைவர் செல்வன் ச. சிவகுமாரன் மன்ற ஆதழாகிய மத்தியவாணியை வெளியிட்டனர். இவ்விதழ் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில அச்சிடப் பட்டது, என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. கதிர். சுந்தரலிங்கம் மாணவர்களின் காவடி நடனம் துதிப்பாடல்கள் புல்லாங்குழலிசை, சிற்றுரை. யோகாசனக்காட்சி முதலிய நிகழச்சு இடம் பெற்றன. செலவன் ச. லோகேஸ்வரன் (செயலாளர்) நன்றியுரை கூறினார்.

## மரம் நாட்டும் காலம்

மழைக்காலம் மரஞ்செடி கொடிகள் நடுவதற்கு நல்ல காலம. பருவத்தே பயிர் செய் என்பது பழமொழி இக்காலத்தில் எவ்வளவு தாவரங்களை நட்டு விருத்தியாக்க முடியுமோ அத்தனையையும் நட்டு உண்டாக்குவோம். பெரிய வளவுள்ளவர்கள் வேப்பு, இலுப்பை முதலிய மரங்களை நடுவதற்கு இது நல்ல பருவ காலம வளவுகளில் மா, பலா, கொய்யா, ஈரப்பலா, தோடை, எலுமிச்சை மாதுளை முதலிய மரங்களை அழகுக்காகவும் பயனுக்காகவும நட்டு வளர்க்கலாம

## ஈரப்பிலாக் கன்று இலவசம்

ஈரப்பிலாக்கன்று நட விரும்புவோர் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ளும்படி உரிமையாளர் கேட்டுக்கொள்கிறார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில்
வழ. இல MB/337

முருகேசு கைம்பெண் மாணிக்கம், சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்
எதிராக — வழக்காளி

கனகர் தம்பிப்பிள்ளை கைம்பெண் நல்லம்மா (சொந்தச் சார்பிலும் இறந்த எதிராளி கனகர் தம்பிப்பிள்ளையின்சட்ட பூர்வ பிரதிநிதி என்ற முறையிலும்) பனிப்புலம் பண்டாரக் குறிச்சி சுழிபுரம்
எதிராளி

மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தின் எம்.பி /337ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1976-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ந் திகதி (15-11-76)காலை 9-30 மணிக்கு அக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதலும் வட்டியுமாக ரூபா1,470/- இன்னும் 1000/- ரூபாவிற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 11% வீத வட்டி 17-7-75ம் திகதியிலிருந்து 28-11-75 வரைக்குங் கூட்டிக்கட்டிய தொகைக்கு 28-11-75 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும் 5% வீத வட்டியும் வழக்குச் செலவு 490-80 சதமும்.

### ஆதனட்ர்ப்பு

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு சங்கானை கோவிற்பற்று, சுழிபுரம் இறை "கிளியன் குறிச்சி" பர, நில. லாச்சம் 3 மூன்று குழி 10 பத்தும வான்பயிர் செய்பயிர்களும் தெற்கெல்லையிலிருக்குங் கிணற்றுப்பக்கமும், எல்லை கிழக்கும் வடக்கும் றோட்டு மேற்கு சரவணமுத்து விசுவலிங்கத்துக்குரிய காணி, தெற்கு மேற்படி விசுவலிங்கத்திற்கும் இராமலிங்கம் பொன்னம்பலத்தின் உருமைக்காரருக்குரிய காணிகள் இதில் சொரியலாய் பர் நில. லா, 3 மூன்றும குழி 2/5 ஐத்தில் இரண்டும் வான்பயிர் செய்பயிர்களும்.

"அகில அகம்" — தா. க. பொன்னுத்துரை
28/1 யாழ் றோட் — கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம் — 72 - 15 10 — 29-9-76

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 14766

கோப்பாய் தெற்கு கோப்பாய் இளையப்பு தின்னத்துரை
எதிராக — வழக்காளி

கோப்பாய் தெற்கு கோப்பாய் 1. சின்னத்துரை சண்முகம பெண 2. நாகமணி
எதிராளிகள

யாழ்ப்பாணம மாவட்டக் கோட்டின ஈடு 14766-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பினனால் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணி 1976 -ம் ஹூ 3-11-76 கார்த்திகை மீ 3-ம புதன் கிழமைமுற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 3550/-ம் 24-2-75 தொடக்கம் 20-11-75 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 508/85.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை "ஆட்டுப்பட்டி" நில. பரப்பு 2 இரண்டும் வீடும பயிர்வகைகளும, தெற்கெல்லை ஆதனத்தின தெற்கெல்லை ஆதனத்துக்குள்ளிருக்கும கிணற்றிற் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும மேற்கெல்லை ஒழுங்கையில் இதற்குரிய பாதைப் பாவிப்புரித்தும. எல்லை கிழக்கும வடக்கும மேற்கும ஒழுங்கை .தெற்கு வீரவாகு அருமைநாயகத்துக்கும் பெண அன்னம்மாவுக்குரிய ஆதனம இதடங்கலும பதிவு இல. K. 253/9.

6, கன்னாதிட்டி றோட் — நா. ஸ்ரீரங்கநாதன்
யாழ்ப்பாணம — கொம்மிஷனரும விலைமதிப்பாளரும்
13-9-76 — 73 18 - 10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 11066

கோவில் தெரு; நல்லூர் யாழ்ப்பாணம் நாகலிங்கம் கோபாலசிங்கம — வழக்காளி

எதிராக

புன்னாலைக்கட்டுவன் தெற்கு புன்னாலைக்கட்டுவன் 1. முருகர் சின்னத்தம்பியும பெண 2. பார்வதி
எதிராளிகள

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 11066-ம் இலக்க வழக்கில எனக்குக்கிடைத்த கோட்டிக்கட்டளைப்படி, பினனால விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1976-ம் ஹூ 28-10 76 (ஐப்பசி) மீ 28 உ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 1,365/-ம் 24.8-69 தொடக்சம் 9-1-70 வரைக்கும் ரூபாய்1,000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 286/35

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று குளமங்கால் இறை 'தென்னவுடையவும் ஒதியடியும்'' பர. நில. இல, 2 குளி 7, 1/16 இதற்கு

## திருத்தொண்டர் தம் சிந்தைச் செம்மை

[ இளைப்பாறிய ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை ]

(முன் வளர்ச்சி — 9)

பிராமணர் வேடம் ஒழி வெண்நூல் பூண்டு மூன்று வகை சிவாக்கினி வளர்த்து யாகம் செய்தார்கள்.

வருணபகவான் குறை வில்லாமல் வருஷித்துக் கொண்டிருந்தான்.

எம்பிராட்டியின் கருணையாகக் காவேரி ஆறுபாய்ந்து நாட்டை செழிப்புறச் செய்கிறது.

இயற்கையோடு ஒன்றுபட்டு அடியார்களிற் பலர் இல்லறஞானிகளாக விளங்கினார்கள்.

இல்லறமே நல்லறமாகும் அடியார்களின் பிள்ளைகளும் பெற்றோரைப் பேணி வாழ்ந்தார்கள்.

மணமகன் மணமகள், சிவம், சக்தி வடிவங்கள்

அவர்கள் இருவரும் திருவடியாத்திரை செய்ய இணைந்திருக்கிறோம் என்ற பாவனையோடு வாழ்ந்தார்கள்.

செல்வன். கழல்ஏத்தும் செல்வமே உண்மையான நிலையுள்ள செல்வம்

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மன்றாடும் மலர்ப்பாதத் தினைமறவாமையை வருவிப்பதே கல்வியின் நோக்கம்

ஆடும் கழலே உலகம, உயிர்த் தோற்றத்திற்கு முழுமுதற்காரணம்.

## சுகாதார இரவு

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் 15-10-76 புதன்கிழமைமாலை 5 மணியளவில் ஆரம்பித்து நடத்திய சுகாதார இரவு விழா புதுமாதிரியாய்ப் பொது மக்களுக்குப் பொதுச் சுகாதார விதிகளை விளக்குவதாய் அமைந்தது. அன்று மாலை விசேட ஆணையாளர் யோசெப் அவர்கள ஆணையாளர் சிவஞானம், சுகாதார அலுவலர் வைத்திய கலாநிதி நடராசா முதலானோர் நகரமண்டப வாயிலில் பூரண கும்பம் குத்துவிளக்கு வைத்து பொதுமக்களை வரவேற்றனர். பிரமுகர்கள் மத்தியில் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார் நகரிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகள் கொடுத்த ஒத்துழைப்பில் சுகாதாரசம்பந்தமான பேச்சுக்கள் நகைச்சுவை நாடகங்கள் நாட்டுக்கூத்துக்கள், கும்மிகள், கோலாட்டங்கள், நல்லமுறையில் நடைபெற்றன. இலையான், நுளம்பு ஆகிய எதிரிகளைக் கொலைக்குற்றஞ் சாட்டி நீதிமன்றத்தில் விசாரித்தமை, நகரசுத்தி செய்யும் மாணவரே முற்பட்ட நாடிக் கூத்தின் அமைப்பு, குடிவெறியால் தவித்த குடும்பம் முதலிய நாடகங்கள் மக்கள் சிந்தனையைத் தொட்டால் எவரும் வீதியில் குப்பையைப் போடமாட்டார்கள். வீதியில் விற்கும் உணவுப் பண்டங்களை வாங்கி உண்ண மாட்டார்கள். குடித்துவெறித்து ஈரல் கருகி நோய்வாய்ப்பட மாட்டார்கள். நல்லவற்றை உருவகப் படுத்தி நடித்துக் காட்டிய மாணவர் வாழ்க. சுகாதாரம் நிலவுக.

## ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல. 13028

1. வீரசிங்கம் கதிரவேலு — வல்வெட்டி — ரோதி

எதிராக

1, சின்னத்தம்பி சண்முகம் 2. பெண் அன்னலட்சுமி வல்வெட்டி — பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப் படியும் குறித்த கோட்டால எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் கீழ்விபரிக்கப்படும் ஆதனத்தை 1976-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ந் திகதி (22-11-76) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமாராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்லுவெட்டியிறை நாத்தாவளை நில. 1 குளி 6½ இது ஆட்சிப்படி நில. 1½. எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கதிரிப்பிள்ளை மகள் சிவகாமிப்பிள்ளைக்குடைய வாதனம் மேற்கு பொதுவாக விடப்பட்ட ஒழுங்கை, தெற்கு கார்த்திகேசர் அருளம்பலத்துக் குடைய வாதனம, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கலவீடு, குசினி, செய்பயிர்கள் யாவும, இன்னும் 9-ம துண்டுக்குள் இருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்கால உரித்தும் (மதிப்பிட்டவிலை ரூபா 12,000/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 4325.00 |
| வட்டி ரூபா 2500/- க்கு 12 வீதப்படி 6-3-75 தொடக்கம் 12-6-75 வரை | | 75.00 |
| வட்டி ரூபா 4325/- க்கு 5 வீதப்படி 12 6-75 தொடக்கம் 22-11-76 வரை | | 306-34 |
| | மொத்த ரூபா | 4706-34 |

சிவலிங்க நிலயம் — க. நல்லலிங்கம்
வி. எம். றோட் — நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்
பருத்தித்துறை 12-10-76 72 15-10-76 விலைமதிப்பாளரும்

எல்லை கிழங்கு சின்னட்டியர் அப்பாத்துரைக்குரிய ஆதனம் வடக்கு தம்பாப்பிள்ளை துரையப்பாவுக்குரிய ஆதனமும் ஒழுங்கையும், மேற்கு ஒழுங்கை, தெற்கு கயிலாயர் முதலித்தம்பிக்குரிய ஆதனம். பதிவு. இல. H. 421/7.

6, கன்னாதிட்டி றோட் — நா. ஸ்ரீரங்கநாதன்
யாழ்ப்பாணம் — கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
11-9 76 — 73 18-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுஉள,
குட்டிப் பசுக்கள் ஓர் ஏழு உள ஐந்து உள,
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பணவற்கு வாய்த்ததே.

There are 24 cows in the cattle-fold (in the farm) There are also ( 7+5= ) 12 cows with calves (tethered at home). Though these latter yield potfuls of milk, the (ordinary) investigator prefers to have the penned up cattle only.

Hindu Organ

Friday, October 15, 1976

## Weapon of Doubtful Worth!

THE newspaper reading public are now being served with repeated reports of sudden cessation of work in some sector or other.

Just as the common man is beginning to thank Providence for the small mercies of a few welcome showers and is being relieved of the continued rigour of defiant drought, the incidence of a series of strikes has taken him by surprise.

The common man's conveyance—the omnibus — all of a sudden disappears from the highway merely because a dangerous guy among the many passengers has trod on the corns of a highly sensitive conductor. To make him more nervous the people's shop where he is scheduled to get his ration of rice — the Co-op. remains bolted. This information coming as a bolt from the blue is enough to make him go mad.

That is not the end of the common man's chapter of complaints. Unwittingly he goes to a ticket counter in the Railway Station just on time, unaware of the interim injunction against the acceptance of currency notes on which crazy mischief makers write down names by which they purpose to ridicule others, only to be turned away as a law breaker. He finds himself in the pitiful plight of having currency yet being unable to reap the benefit of possessing it.

Who is responsible for this worry of the common man? Strikes, they say, are legitimate weapons in the hands of employees to get redress of their grievances. But here is a weapon which when wielded tends to cause hurt not to the person against whom it is employed but to the unsuspecting common man! It is a weapon doubtless but is it not destructive to an extent, Cannot it cut both ways?

The people of this Island have been long subjected to the privations that result from over-night decisions to call a cessation of work. Work according to religion is a duty. And duty cannot be forsaken. We who are a religious people must begin at least now to examine the scope of work and to realise that dignity of labour also implies dignity of duty.

Religion teaches the strict adherence to moral laws and requires the discharge of duty. It is, therefore, a matter of duty for religious organizations to educate the people on the moral of disciplined life.

## AN ELEMENTAL NECESSITY

Love Him Whose form the like of which does not exist, either seen or conceived in thought Infinite is that Good Entire. Embrace Him, ye men, giving up attachments that pull you down.

**Hindu Sacred Song.**

The worship of God is an elemental necessity of life as it has evolved in man and his mind. It is on a par with the urge for the preservation of life and urge for the maintenance of the race, like hunger and thirst and the urge of sex. It is a fundamental of existence and survival, not what can be questioned on the basis of use and utility. Man's survival calls for detachment and therefore for God.

**C. Rajagopalachariar.**

## Sukhadia on Universal Appeal of 'Tirukkural'

"Tirukkural", the Tamil classic by Tiruvalluvar translated into 22 languages, was described by the Governor Mr. Mohanlal Sukhadia as a superlative contribution to Indian thought. deriving its strength from the intellectual and cultural life of the country and in turn enriching them.

Mr. Sukhadia said "Tirukkural" took its rightful place among works like the Bhagavad Gita and the Bhishma Parva of the Mahabharata, with which it had a good deal in common inaugurating a three-day seminar on the work, the Governor said it belonged not to any particular part of the country but to entire India.

Scholars from all over the State are participating in the seminar organised by the Tamil Nadu universities and the International Institute of Tamil Studies in Valluvar Kottam. A copy of "Tirukkural" printed on palm-leaf by the State Khadi and Village Industries Board was presented to the Governor by the Director of information. Mr. N. Krishnamurthi.

Dr. S. V. Subramanian Director of the Institute welcomed the guests and Mr. S. Venkataswami read the messages.

Dr. Malcolm Adiseshiah, Vice-Chancellor, Madras University described Valluvar as an international poet. The religion he spelt out was common to all, He dealt with all aspects of man's activities and followed what he taught.

Mr. S. V. Chittibabu, Vice-Chancellor, Madurai University, said Tirukkural was not a treasure for the Tamils alone but was a perennial source of joy for entire humanity.

Mr. V. S. Manickam, Head of Tamil Department, Annamalai University, explained the purpose of the Seminar Mr. C. N. Krishnabharathi Deputy Director of Information. Tamil Nadu Government, proposed a vote of thanks

## The Jaffna Archaelogical Society

### ( Lecture by Dr. Michel Marliere )

(Continued from last issue of 17-9-76)

The Indian influence is obvious in the religious language that have been used or are still used in South East Asia, that is to say Sanskrit and Pali— and evan Arabio

The Indian influence is obvious in the Khmer Laotian and Siamese alphabets.

It pervades. with the Ramayana, the literatures of Cambodia, Siam, Laos, Indonesia and Malaysia.

The religious, the royal, the administrative, the common vocabularies of these countries are also very much indebted to sanskrit and pali and also to arabic as transmitted through the Indian medium. The royal ceremonies at the Siamese court even bear the influence of the Tamil religious poetry since Tevaram (composed by the most honoured Nayanmar Manickavasagar) are recited on certain auspicious ceremonies by the royal brahmins up to the present day.

And the Tamil verses inserted in the Siamese royal rituals conduct us to evoke the part the Hindu and Sinhalese cultured heritage plays in contemporary South-east Asia.

Only in Bali and in Lombok does the Hindu tradition perpetuate as such. But until very recently the royal ceremonies of the Khmer and the Laotian courts were imbued with Hindu conceptions and rituals. Although Moslem, the royal traditions of the Malay states still convey a very significant Hindu tradition in their rituals and in their regalia.

As regards the religious field and popular religion, the Buddhist ceremonies of the Theravadin school are tinged with Hindu and Mahayanist traditions, together with a stronger Sinhalese influence, in Cambodia, Siam and Laos. In Viet nam (where there seems to be a slight revival in the North, whereas the Sangha finds difficulty in adapting itself to the new political conditions in the South), the Mahayana branch still uses the sanskrit scriptures as well as the Chinese scriptures, while the smaller Theravadin branch naturally uses Pali and shares a common Sinhalese heritage with Cambodia, Laos Thailand and Burma.

As regards literature, except in Viet nam, the inspiration has been very much fraught with the epic of the Ramayana in the whole South-east Asia. until modernwestern influences introduced new literary genres, themes and trends.

Theatre and the minor forms of this art are also very strongly influenced by the Ramayana in all these countries, and Khmer, Siamese and Laotian classical dance, as well. The music that accompanies the dance, the drama, the wayang. the pre-ordination and funeral ceremonies, although it has distinctive local characteristics, derives partly from Indian music too.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday October 15, 1976.

EDITOR-IN-CHIEF B. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org